# பட்டா பெற

**(பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)**

அனுப்புநர் தேதி: . . . . . . .

**(பெயர் முகவரி எழுதவும்)**

பெறுநர்

பொது தகவல் அலுவலர்.
-------------------- தாலுகா அலுவலகம்
**(முகவரி எழுதவும்)**

ஐயா,

பொருள்:தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6(3)-ன் கீழ் பட்டா பெறுதல் தொடர்பான தகவல் கோருதல் - தொடர்பாக.

பார்வை: பட்டா மாற்றம் தொடர்பாக நான் தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பிய எனது மனு நாள்: . . . . . . . . மற்றும் RPT எண்: . . . . . . . . . . , நாள்: . . . . . . . .

- - - - -

தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6(3)-ன் கீழ் பட்டா பெறுதல் தொடர்பாக நான் கீழே கேட்டுள்ள தகவல்களை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. மேற்படி பத்திரம் கிரயம் பெற்றபோது பட்டா மாற்றத்திற்கும் உட்பிரிவிற்குமாக பணம் கிரயம் பெற்றவரால் செலுத்தபட்டு அப்படி பட்டா மாற்றம் செய்வதற்கு ஆட்சேபணை இல்லை என்று கிரயம் கொடுத்தவர் கையொப்பமிட்டுக் கொடுத்த உரிய படிவம் XXXV-1 பத்திரப் பதிவு அலுவலகத்தி-ருந்து அனுப்பி, அது தங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளதா? ஆம் எனில் எந்த தேதியில் பெறப்பட்டுள்ளது.

2) மேற்குறிப்பிட்ட படிவம் தங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொண்டபின் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளைத் தெரிவிக்கும் கோப்பின் நோட்பைல் உட்ட அனைத்துப் பக்கங்களின் ஒளி நகல் வழங்கவும்.

3) அ) பார்வையில் குறிப்பிட்டுள்ள கடிதம் தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றதா? ஆ) ஆம் எனில் அதன் மேல் எடுத்துள்ள நடவடிக்கைகளைத் தெரிவிக்கும் கோப்பின் நோட்பைல் உட்பட அனைத்துப் பக்கங்களின் நகல் வழங்கவும்.

4) அ) ஒருவர் பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பித்து அவருக்கு எத்தனை நாட்களுக்குள் பட்டா பெயர் மாற்றம் மற்றும் உட்பிரிவு செய்து பட்டா எத்தனை நாட்களில் வழங்க வேண்டும். ஆ) அவ்வாறு வழங்காத அதிகாரிமேல் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று தங்கள் துறை விதிகளில் உள்ளதோ அவைகளைத் தெரிவிக்கவும். மற்றும் அந்த விதிகளின் நகல்கள் வழங்கவும். இ) பார்வையில் குறிப்பிட்டுள்ள மனுமீது நடவடிக்கை எடுத்து எனக்கு பட்டா வழங்க பொறுப்பான அதிகாரிகளின் பெயர்கள், பதவியின் பெயர் மற்றும் அவர்கள் தற்போது பணிபுரியும் இடங்களின் முகவரிகள் தெரிவிக்கவும்.

5) அ) நான் விண்ணப்பம் அனுப்பிய அதே ஆண்டு பட்டா கேட்டு, மொத்தம் எத்தனை விண்ணப்பங்கள் தங்கள் அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளன? ஆ) அவைகளில் எத்தனை பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது?

6) அ) என் மனு பெற்றுக் கொண்டதற்குப் பின்பு, இன்றுவரை எத்தனை மனுக்கள் பெறப்பட்டன? ஆ) அவைகளில் எத்தனை பேருக்கு இதுவரை பட்டா வழங்கப்பட்டுள்ளது? அவர்களின் பெயர் முகவரி வழங்கவும். இ) எனக்கு பட்டா வழங்கப்படாததற்குரிய காரணங்களை தகவல் பெறும் உரிமைச்சட்டம் பிரிவு 4(1)d ன்படி தெரிவிக்கவும்.

7) அ) தமிழக அரசு ஆணை எண்:114/2006 (P&A.R) படி தங்கள் அலுவலகத்தில் கடந்த ஓராண்டில் எத்தனை மனுக்களுக்கு 3 தினங்களில் ஒப்புதல் சீட்டு. 30 தினங்களில் இடைக்கால பதில், 60 தினங்களில் இறுதி பதில் அளிக்கப் பட்டுள்ளது என்ற தகவல்களை வழங்கவும். ஆ) என் மனு மீது எடுத்த நடவடிக்கைகளை மேற்படி அரசாணைப்படி எனக்குத் தெரிவிக்கப்பட்டதா? ஆம் எனில் அதன் நகல்கள் வழங்கவும்.

8. நான் கேட்டுள்ள ஆவணங்களைப் பெற, எப்படி, யாரிடம், எந்த இடத்தில் பணம் செலுத்த வேண்டும் என்ற தகவலையும் வழங்கவும்.

மேற்கண்ட தகவல்களைப்பெற ரூ.10-க்கு நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

இப்படிக்கு,

(ஒப்பம் & பெயர்)